05-06-2025.
O.S.No. 142/2018

பி.வா.சா.1 ரேணுகா அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

என்னுடைய தாயார் கிருஷ்ணவேணி. அவருடைய சகோதரி பெயர் சகுந்தலா. மேற்படி இருவரும் 1962ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான். வாதசாஆ.1ன் படி மேற்படி இருவரும் அவர்களுடைய மூதாதையர் சொத்தை பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் என் பாட்டியின் சொத்தை பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். அந்த பாகப்பிரிவினையில் என் தாயார் கிருஷ்ணவேணிக்கு கிடைத்த சொத்துக்கள்தான் தாவாச்சொத்துக்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் வரதராஜன். என் பெற்றோர்களுக்கு மொத்தம் 3 மக்கள். சீத்தாராமன் (1ம் பிரதிவாதி) என்னுடைய அண்ணன். நான் 2ம் பிரதிவாதி. ரஜினி என்னுடைய சகோதரி. அவர் இறந்துவிட்டார். ரஜினி 3ம்பிரதிவாதி கந்தசாமியை காதலித்து திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி ரஜினியின் மகன். வாதி ரஜினியின் மகள். வாதசாஆ.7 விடுதலை பத்திரத்தை ரஜினி என் அம்மா, என் அண்ணன், எனக்கு ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். வாதசாஆ.4 ஆவணமானது என் தாயார் 1ம் பிரதிவாதி ஆகியோர் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமா என்றால் இல்லை. அது பாகப்பிரிவினை பத்திரமாகும். என் தாயார் கிருஷ்ணவேணி 2008ம் வருடம் காலமானார். வருடம் ஞாபகமில்லை. டிசம்பர் 23ல் காலமானார். என் சகோதரி ரஜினி இறந்த வருடம்

ஞாபகமில்லை. 2015ல் இறந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. 1977ம் வருடம் ரஜின் எனக்கு விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்தபோது தாவாச்சொத்துக்கள் என் தாயார் பெயரில் இருந்தது என்றால் சரிதான். கிருஷ்ணவேணி 2010ம் வருடம் இறந்தபோது அவர் பெயரில் இருந்த தாவாச்சொத்து கிருஷ்ணவேணியின் பெயரில் இருந்து வந்ததால் அவருடைய 3 குழந்தைகளுக்கும் சட்டப்படி வரப்பெற்று ரஜினியின் 1/3 பாகமான சொத்து ரஜினியின் வாரிசுகளாகிய வாதி, 3,4 பிரதிவாதிகளுக்கும் சமமாக கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

1962ம் வருடம் செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என் தாயாருக்கு பூர்வீக பாத்தியமான சொத்திற்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை என்றால் என் பாட்டி குருவம்மாள் பெயரில் உள்ள சொத்திற்கு மட்டும் போடப்பட்ட பாகப்பிரிவினையாகும். பாகப்பிரிவினையின்படி கிடைத்த சொத்திற்கு என் தாயார் மட்டுமே முழு உரிமையாளர் என்றால் சரிதான். 1977ம் வருடம் என் அக்காவிடம் இருந்து பெற்ற விடுதலைப் பத்திரமானது என் அக்கா ரஜினிக்கு திருமணமான அடுத்த நாள் எழுதி வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அப்போது எனக்கு சிறுவயது என்பதால் தெரியாது. அந்த சமயத்தில் நான் மைனராக இருந்தேன். 1977 விடுதலைப்பத்திரம் என் சகோதரி எழுதிக்கொடுக்கும்போது தாவாச் சொத்தானது என் அம்மா பேரில் இருந்ததாலும், எனக்கும் என் சகோதரருக்கும் சொத்தில் உரிமை இல்லாததாலும் அதனால் அந்த விடுதலைப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி விடுதலைப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, நிலைக்கத்தக்கதல்ல என்பதால் ரஜினிக்குரிய பாகத்தை வாதி மற்றும் 3

மற்றும் 4 பிரதிவாதிகள் பெறத்தக்கவர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.05 17:24:14 +0530

Principal District Judge,
Dindigul.